1979 ஏப்ரல் 23]

மணவாளக்குறிச்சியிலுள்ள வள்ளியாறு பாலம்

* வினா எண். 780 —திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் சாலையில் 16-வது கி. மீ-ல் மணவாளக்குறிச்சியிலுள்ள வள்ளியாறு பாலம் மிக அபாயகரமான நிலையில் இருப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுதுள்ள இரும்புப் பாலத்திற்குப் பதிலாக ஒரு வலுவேற்றப்பட்ட சிமெண்ட் காங்கிரிட் பாலம் அமைக்கும் பணிக்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சி மிக முக்கியமான இடம். மண்ணிலிருந்து தோரியம் என்ற கனிப்பொருளை அங்கே எடுக்கிறார்கள். அங்கே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். வாகனப் போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. அந்த ஊரை இணைப்பது இந்த ஒரே ஒரு பாலம்தான். ஆகவே அந்த ஒரே ஒரு பாலத்தைக் கட்டிக்கொடுக்கன பரிசீலனை, ஆய்வு என்று சொல்லி காலத்தைக் கடத்தாமல் உடனடியாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே வருகின்ற பார்ட் 2 ஸ்கீமிலே எடுத்துக்கொள்ளப்படும், 12 லட்சம் திட்டச் செலவிலே அது மேற்கொள்ளப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, இத்தகைய அறிக்கையை கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.